முருகப்பெருமான் துணை

**மகான் கல்லுளிச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.10.2022, ஞாயிற்றுக்கிழமை

1. வரம் அருளும் ஞான குருவே
   வள்ளலாய் வாழும் ஞானியே
   அறம் பெருகும் ஆற்றல் தருகின்ற
   அண்ணலே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   ஆசிதனை சுபகிருது தரிவை திங்கள்
   அறிவிக்க இருபான்நவ திகதி கதிர் வாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 29 ம் நாள் 16.10.2022, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் கல்லுளிச்சித்தர் யானும்
   வழங்குவேன் உலகநலம் காண
   சோரமின்றி ஞானம் தேறிட
   சுத்த நெறி ஏற்று வந்திட
4. வந்திட மாற்றங்கள் தானும்
   வருவோர் அரங்கன் வழி வரமாக
   சிந்தை தெளிவு சர்வ பலமும்
   சித்திகளாக அடைந்து உயர்வர்
5. உயர்வான ஞானவான்கள் தனை
   உருவாக்குவதே தன் அவதாரமென
   தயவாக அருளும் அரங்கன்
   தவக் குடிலை அனுகி மக்கள் வர
6. வருகவே மாற்றம் கூடியே
   வறுமை பிணி பிறஅல்லலிலா
   பெருமை தரும் வாழ்க்கையாக
   பெரும் பாதுகாப்பு கூடி சிறப்பர்
7. சிறப்பான ஞானி அரங்கன்
   சித்திகளை உணர்ந்து அறிந்து
   மறுப்பின்றி இணைபவர்கட்கு
   மரணம் மறுமை சகலதும் விலகி
8. விலகியே வந்த நோக்குடன்
   வினை வென்று அரங்கனால்
   காலம் வென்ற ஞானிகளாகவே
   கந்தவேலன் ஆசியுடன் திளைப்பர்
9. திளைக்கவே சமூக மாற்றமாக
   தேசிகன் வழி தேறிடும்
   சளைக்காத தொண்டர் படைகளே
   சாதனைபல புரிந்து நிற்பர்

10. நிற்கவே சகல வகைதனிலும்
நீதி காக்கப்பட்டு சேவை
அற்புதமாக நடந்தேறியே
அரங்கனால் நிகழும் உலக மாற்றம்

11. மாற்றம் ஞான ஆட்சிக்காலமாக
மகான்கள் படை பெருக
ஆற்றல்பட ஞான ஆட்சி உருவாகும்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–